1972 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல்லவராயப் பேட்டை கோயிலில் உள்ள பழைய கல்வெட்டுக்களின் மூலம், அந்தக் கோயிலுக்கு நிறைய சொத்துக்கள் இருந்தன என்று விவரம் அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அந்தச் சொத்துக்களை இப்போது தனிப்பட்ட பல பேர் அனுபவித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இவற்றைப் பற்றிப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

முற்பகல் 9.30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1924-ம் ஆண்டு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளபடி அந்தக் கோயிலில் 23 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்வெட்டுகளில் சில விவரங்கள் காணப்படுகின்றன. குறிக்கப்பட்டுள்ள அரசர்கள் : சோழர், இரண்டாம் இராசராசன் ; ஊர் : இராசாதிராசன்குளத்தூர் ; ஊர்ப் பிரிவு : இராசாதிராசவளநாட்டு திருவிந்தளூர் நாட்டு குளத்தூர் ; கடவுள் பெயர் : இராச ராஜேச்சுரம் உடையார் ; கோயில் : இராசராஜேச்சுரமுடையார் கோயில்.

இக்கோயிலுக்கு நந்தா விளக்கு எரிக்க ஆடு கொடையாகக் கொடுத்ததும், கோயில் பூஜைக்கும் திருவிழாக் காலத்திலும் அன்றாடச் செலவுக்கும் நிலம் கொடையாக அளித்ததையும், சோழ அரசுக்கு ஒருவன் வரி செலுத்தாமையால் அவன் மனைவி, மகன் சொத்துக்களை அரசு எடுத்து விற்று அவற்றை இக்கோயிலுக்கு கொடையாக அளித்ததையும், இராசராஜேச்சுரம் உடையார் கோயிலுக்கு குலுத்தோங்க திருச்சிற்றம்பல உடையான் பெருமாள் நம்பியார் என்ற பல்லவரையர் வழிபாட்டிற்கும், பூஜைக்கும் நந்தவனம் வைக்கவும் கொடையாக நிலம் வழங்கியதையும், மாப்படுகை என்ற அழகிய சதுர்வேதி மங்கலத்தார் பொது எலத்தில் (இராசராசப் பெருவில்) வாங்கிய நிலத்தை, இவர்களும் பொது மக்களும் சேர்ந்து ஐம்பது காசுக்கு இராசாதிராச வளநாட்டு, நாங்கூர்நாட்டு நாங்கூர் சபையாரால் இக்கோயில் இறைவன் திருவேட்டை திருநாளில் சோலையில் அமர்ந்திருக்கும் பொழுது படைப்பதற்கு ஊர்கீழ் இறையிலியாக (வரி நீக்கி) அளிக்கப்பட்ட நிலக் கொடையையும் குறிக்கின்றன.

இப்போது பல ஆண்டுகள் இடைவெளி கடந்த பிறகு பல தனிப்பட்டவர்கள் அந்த நிலங்களை அனுபவிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவர் அனுபவித்தாலே அவர்களுக்குச் சொந்தம் என்ற நிலையில், பல நூற்றாண்டுகள் கடந்துபோன பிறகு நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இவற்றை எல்லாம் வரலாற்றுக் குறிப்புகள் என்ற அளவுக்குத்தான் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சுப்பிரமணியபுரத்துக்கு உதவிப் பதிவு அலுவலகம்

***750 வினா—திரு. சி. இராமநாதன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் சப்-ரிஜிஸ்தரார் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் உதவிப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

திரு. சி. இராமநாதன் : அது இந்த ஆண்டில் ஏற்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு ஆவன செய்யப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: திண்டுக்கல் வட்டம், சின்னாளப்பட்டியில் பத்திரப் பதிவு அலுவலகம் இல்லை. அதனால் அந்தப் பகுதி மக்கள் திண்டுக்கல் அல்லது ஆத்தூருக்கு எட்டு மைல் தூரம் சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு பத்திரப் பதிவுக் காரியாலயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதி வசதிக்கு ஏற்றபடி கனம் உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்து நிறைவேற்றும்.